

திருப்பூர் கிழக்கு மாவட்டம், காங்கேயம் செந்தூர் மஹாலில் காங்கேயம் ஒன்றிய, நகர பகுதியிலிருந்து ம.தி.மு.க., பா.ஜ.க. கட்சிகளைச் சார்ந்த 100க்கும் மேற்பட்டோர் அக்கட்சியிலிருந்து விலகி கழக துணை பொதுச் செயலாளர், முன்னாள் அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மாவட்டச் செயலாளர் இல.பத்மநாபன் ஆகியோர் முன்னிலையில் தி.மு.கழகத்தில் இணைந்தனர். மாவட்ட துணைச் செயலாளர் ராசி கே.ஆர்.முத்துக்குமார், காங்கேயம் நகரக் கழகச் செயலாளர் வசந்தம் நா.சேமலையப்பன், ஒன்றிய கழகச் செயலாளர்கள் கே.கே.சிவானந்தன் (காங்கேயம் தெற்கு) சி.கருணை பிரகாஷ் (காங்கேயம் வடக்கு), நகர துணைச் செயலாளர் சுப்பு உள்பட மாவட்ட ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு மீது

# முகநூலில் அவதூறு பரப்புவோர் மீது தி.மு.க. புகார்!

## மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம், கழக வழக்கறிஞர்கள் புகார் மனு!

திருவண்ணாமலை, ஜூலை 12–

முன்னாள் அமைச்சர் எ.வ. வேலு அவர்களைப்பற்றி முக நூலில் அவதூறு பரப்புவோர் மீது, திருவண்ணாமலை மாவட்ட காவல்துறை கண்காணிப்பாள ரிடம், கழக வழக்கறிஞர்கள், மாவட்ட அமைப்பாளர் இரா.கார்த்தி கேயன் தலைமையில் தகவல் தொழில்நுட்ப சட்டத்தின்படி வழக்குப்பதிவு செய்து தக்க நட வடிக்கை எடுக்க புகார் மனு அளித் துள்ளனர்.

இதுகுறித்து திருவண்ணா மலை மாவட்ட காவல் கண்கணிப் பாளரிடம் கழக வழக்கறிஞர்கள் அளித்துள்ள புகார் மனு வருமாறு:–

கடந்த 08.07.2026 அன்று சொர்க்க பூமி திருவண்ணாமலை என்ற முகநூல் பதிவில் மேற் சொன்ன எங்களது மாவட்டச் செய லாளர் எ.வ.வேலு அவர்களையும், திராவிட முன்னேற்ற கழகத்தின் மீதும் நற்பெயருக்கும், புகழுக்கும் களங்கம் விளைவிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் பல பொய் யான கருத்துக்களை பதிவு செய்து இருப்பதை நான் இன்று (09.07.2026) கைப்பேசி மூலம் முகநூல் படித்து பார்த்து மிகுந்த அதிர்ச்சி அடைந்தேன். மேலும் அதனுடைய பதிவிட்ட சங்கதி களை பதிவிறக்கம் செய்து இத்து டன் இணைத்துள்ளேன். அதில் பொய்யான சங்கதிகள் புனையப் பட்டு, கழகத்தையும், எ.வ.வேலு அர்களையும் அவமானப் படுத்தும் வகையில் இருந்து வருகிறது. மேற்படி செயல் பொது மக்களி டையே எ.வ.வேலு அவர்களின் நற்பெயருக்கு களங்கம் விளை விக்கும் வகையில் அரசியல் காழ் புணர்ச்சி காரணமாக திட்டமிட்டு, பொய் பரப்புரை செய்யும் செயலா கும். இதனால் உலகம் முழுவதும் இருக்கும் தமிழர்களும், இந்தியர் களும் குற்ற உணர்வோடு அவரை பார்க்கும் நிலைமை ஏற்படுகிறது.

பொது அமைதியை குலைக் கவோ, பொது கொந்தளிப்பை ஏற்படுத்தவோ அல்லது விரோ தப்போக்கை தூண்டவோ கூடிய இத்தகைய தூண்டல் ஊடங்கள் வெறுப்பு பேச்சு கையாளப்பட்ட ஊடங்கள் மற்றும் தவறான தகவல்களைப் பரப்புபவரை பேச்சு மற்றும் சுதந்திர போர்வை யில் அனுமதிக்க முடியாது என்று உச்ச நீதிமன்றம் பலமுறை வலி யுறுத்தியுள்ளது, என்று தெரிவித் துக் கொள்கிறேன். எனவே தற் போதைய புகாரானது உடனடியாக F.I.R. பதிவு செய்யப்படவும் மின் னனு ஆதாரங்களை பாதுகாக்க வும் மற்றும் சட்டத்தின் படி முறை யான விசாரணை நடத்தவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது. விசா ரணையின்போது மேற்சொன்ன விபரங்களுக்கு ஆதாரங்கள் அனைத்தையும் நான் தாக்கல் செய்கிறேன்.

மேற்படி திருவண்ணாமலை சட்டமன்றத் தொகுதியின் சட்ட மன்ற உறுப்பினர் எ.வ.வேலு அவர்கள் செய்த சேவைகள் குறித்து சுருக்கம் பின்வருமாறு:–

அவர் திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டு வட்டம், சே.கூடலூர் என்ற கிராமத்தைச் சேர்ந்தவர் ஆவார். விவசாய குடும் பத்தில் பிறந்தவர் ஆரம்ப காலம் முதலே திராவிட இயக்கத்தில் தன்னை ஈடுபடுத்தி கொண்டவர், சிறு வயது முதலே படிப்பை முடித்து கடினமாக உழைத்து உழைப்பால் உயர்ந்தவர் ஆவார். முதல் முத லாக சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர் அந்த தொகுதிக்கு நல்ல சேவை புரிந்து பேரும் புகழும் பெற்றவர். அதன் பிறகு திருவண்ணாமலை சட்டமன்றத் தொகுதியில் தொடர்ச்சி யாக தேர்தலில் 5 முறை வெற்றி பெற்றவர் அதில் 2006 ம் ஆண்டு உணவுத்துறை அமைச்சராக பொறுப்பேற்று திறம்பட செயலாற் றியவர். அவரது காலத்தில் பொது விநியோக திட்டத்தில் எந்தவித குறைபாடுகள் இல்லை என்றும் சிறப்பாக இருக்கிறது என்றும் உச்ச நீதிமன்றமே பாராட்டியது தொலைக்காட்சியிலும், தினசரி நாளேடுகளிலும் வந்துள்ளது. 2021ம் ஆண்டு தமிழ்நாடு பொதுப் பணித்துறை அமைச்சராக இருந்த போது நல்ல கட்டமைப்புகளையும் நெடுஞ்சாலைதுறையில் சாலை வசதிகளையும் ஏற்படுத்தியவர் குறிப்பாக திருவண்ணாமலை தொகுதிக்கும் திருவண்ணாமலை மாவட்டத்திற்கும் பல வளர்ச்சி பணிகளை செய்தவர் .

திருவண்ணாமலை மாநகரில் தூய்மை அருணை என்ற இயக் கத்தினை அரசியலுக்கு அப்பாற் பட்டு ஒன்றிணைத்து வாரம் தோறும், தினந்தோறும் தூய்மை பணிகளை திருவண்ணாமலை கோவில் சுற்றும் பாதையிலும், கிரிவலம் பாதையிலும் சுத்தம் சுகாதாரத்தை பேணுபவர் அவரே ஞாயிற்றுக்கிழமைகளில் தூய்மை அருணை சீருடையில் குப்பை களை அகற்றியும் சாக்கடைகளை சுத்தம் செய்தும் அகற்றியும் பணி களை தன்னுடைய அறக்கட்டளை யின் அலுவலகத்தை உண்டாக்கி குறைகளை கேட்டு தீர்த்து வைப் பவர்.

மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்ற அடிப்படையில் பொதுமக்களுக்கும், தமிழ்நாட்டிற் கும் சேவை செய்து வருபவர், திருவண்ணாமலை மாவட்ட மக்க ளின் நன் மதிப்பை பெற்றவர் மேலும் சரஸ்வதி அம்மாள் அறக் கட்டளை மூலம் திருவண்ணா மலை மாவட்டம் சு.வாளவெட்டி கிராமத்தில் மாணவர்களுக்கு விடுதி கட்டுவதற்கு இடம் வாங்கி கொடுத்தவர் அவரது சொந்த ஊரில் ஆரம்ப சுகாதார நிலையம் கட்டுவதற்கு இடம் வாங்கி கொடுத் தவர் தண்டராம்பட்டு கிராமத்தில் கூட்டுறவு நிலவள வங்கிக்கு நிலம் வாங்கி கொடுத்தவர் அப்படி பொது வாக மக்கள் பயன்பாட்டிற்கு பணத்தை பொருட்படுத்தாமல் சேவை புரிந்து வருபவர்.

திருவண்ணாமலை மாநகரில் அருணை தமிழ் சங்கம் என்ற பெயரில் கடந்த 15 ஆண்டுகளுக்கு மேலாக தமிழர் திருநாளில் ஒவ் வொரு ஆண்டும் தமிழுக்கு தொண்டாற்றிய 5 பேரை தேர்வு செய்து கௌரவித்து பணமுடிப்பு வழங்கி பாராட்டு சான்றிதழ் வழங்கி கட்சி பாகுபாடு இன்றி தமிழை வளர்த்து வருபவர்.

கடந்த 2011 ம் ஆண்டு அவர் மீது திருவண்ணாமலை DV Act மூலம் வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்ததாக ஒரு வழக்கு பதிவு செய்து அவ்வழக்கு திரு வண்ணாமலை CJM நீதிமன்றத் தில் நடைபெற்றது எ.வ.வேலு அவர்கள் வருமானத்திற்கு அதிக மாக சொத்து எதுவும் சேர்க்க வில்லை என்று டிஸ்சார்ஜ் செய்து விட்டது. அதன் பேரில் சென்னை உயர்நீதிமன்றத்தில் அரசாங்கம் செய்த மேல்முறையீட்டை தள்ளு படி செய்து விட்டார்கள். அதன் பிறகு உச்சநீதிமன்றத்தில் மேல்மு றையீடு தாக்கல் செய்த போது முதல் ஏற்பிலேயே தள்ளுபடி செய்து விட்டார்கள்.

அவர் தவறு செய்து இருந்தால் நீதிமன்றம் சுட்டி காட்டி இருக்கும் அவ்வாறாக சட்டமன்ற உறுப்பினர் எ.வ.வேலு அவர்கள் குற்றம் செய் யாத அளவுக்கு நன்மதிப்பை பெற் றவர் அவர் தொடர்ந்து 5 முறை திருவண்ணாமலை தொகுதியி லேயே சட்டமன்ற உறுப்பினராக வருவதற்கு பொதுமக்கள் ஆதர வும் அவர் செய்த சேவைகளும் தான் காரணம் மேற்படி நபர் சில அரசியல் காழ்ப்புணர்ச்சியில் பொய்யான சங்கதிகளை சமூக வலைதளங்களில் பரப்பி வருவது உண்மைக்கு புறம்பானது பொய் யானது சோடிக்கப்பட்டது அரசியல் காழ்ப்புணர்ச்சி கொண்டது.

எனவே மேலே குறிப்பிட்ட சமூக ஊடகக் கணக்கை இயக்கும் நபருக்கு எதிராக உடனடியாக குற்ற வழக்கு பதிவு செய்யப்பட வேண்டும் என்றும் அனைத்து மின்னனு ஆதாரங்களும் பாதுகாக் கப்பட்டு உறுதி செய்யப்பட வேண் டும் என்றும் ஆட்சேபனைக்குரிய ஊடகத்தை உருவாக்குவதற்கும் பரப்புவதற்கும் காரணமான நப ரின் அடையாளம் கண்டறியப்பட வேண்டும் என்றும் அத்துமீறல் பதிவுகள் நீக்கப்பட்டு மேலும் புழ கத்தில் விடாமல் தடுக்கபட வேண் டும் என்றும் முகநூல் கணக்கு முடக்கப்பட வேண்டும் என்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு புகார் மனுவில் கூறப் பட்டுள்ளது.

மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் இரா.கார்த்திகேய னுடன் வழக்கறிஞர்கள் அ.அருள் குமரன், ந.முரளி, ஜெ.வெங்கடே சன், எஸ்.கார்த்திகேயன், இரா. பச்சையப்பன், கார்த்தி, அமிர்த ராஜ், விக்னேஷ், சதிஷ்குமார், மோகன்ராஜ், பிரகாஷ், ஸ்ரீராம், விக்னேஷ், அன்பு, முனியன் ஆகி யோர் உடன் இருந்தனர்.

### அகஸ்தீஸ்வரம் வடக்கு ஒன்றியம்,

# மயிலாடி பேரூர் தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் ரெ.மகேஷ் சிறப்புரையாற்றினார்!

*கன்னியாகுமரி, ஜூலை 12-*

*கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வடக்கு ஒன்றியம், மயி லாடி பேரூர் தி.மு.க. நிர் வாகிகள் ஆலோசனைக் கூட்டமானது 10.07.2026, வெள்ளிக்கிழமை அன்று மாலை 6.00 மணியளவில் மயிலாடி பேரூர் கழக அலு வலகம் அருகில் வைத்து மயிலாடி பேரூர் கழக செய லாளர் எ.சுதாகர் தலை மையில், அகஸ்தீஸ்வரம் வடக்கு ஒன்றியச் செயலா ளர் எம்.மதியழகன் முன்னி லையில் நடைபெற்றது.*

*கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக கன்னியா குமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு கழக வளர்ச்சி பணிகள் தொடர்பாக நிர் வாகிகளுக்கு ஆலோசனை கள் வழங்கி சிறப்புரை யாற்றினார்.*

*கூட்டத்தில் மாநில கலை, இலக்கிய பகுத்தறி வுப் பேரவை செயலாளர் என்.தில்லைசெல்வம், மாவட்ட சிறுபான்மை யினர் நல உரிமைப் பிரிவு துணை அமைப்பாளர் அ.வேதமணி, மாவட்டப் பிரதிநிதி த.மதன், ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகி A.கவிதன், பேரூர் கழக நிர்வாகிகள் பழனி, ராமசந்திரன், கிருஷ்ணன், கோபால், முத்துகிருஷ்ணன் உட்பட ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், கிளை கழக செயலாளர்கள், கழக சார்பு அணிகளின் நிர்வாகி கள், BLA2, BLC, BDA மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.*

*தீர்மானம்: 1 கல் சிற்ப தொழிலுக்கு புவிசார் குறி யீடு கிடைக்கப்பெற்ற மயி லாடி பகுதியில் சுமார் 5000 பேர் சிற்பத் தொழில் செய்து வருகின்றனர். இத்தொழி லுக்கு தேவையான கற்கள் தற்போது வெளி மாவட் டங்களில் இருந்து பெறப்ப டுவதால், அதிக செலவினை தவிர்க்கும் வகையில் அதை கன்னியாகுமரி மாவட்டத் திலேயே கிடைக்க பெறு வதற்கு தேவையான முயற்சி மேற்கொள்ள வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.*

*தீர்மானம்: 2 பேரூராட் சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள மலைகளில் இருந்த வனவிலங்குகள் அடிக்கடி ஊருக்குள் புகுவதால் பொதுமக்கள் மிகுந்த அச் சத்துடன் இருந்து வருகின் றனர். எனவே வனவிலங்கு கள் ஊருக்குள் வருவதை தடுக்கும் வகையில் மாவட்ட வன அலுவலகம் சார்பில் தடுப்பு வேலி அமைத்திட வேண்டி இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.*

*தீர்மானம்: 3 கடந்த தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் கழக வேட்பாள ருக்காக உழைத்த கழக நிர் வாகிகளுக்கும், மதச்சார் பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சியினருக்கும் மற்றும் வாக்களித்த அனைத்து வாக் காள பெருமக்களுக்கும் மாவட்ட தி.மு.கழகம் மற் றும் பேரூர் தி.மு.கழகம் சார்பாக நன்றி தெரிவிக் கப்பட்டது.*

*தீர்மானம்: 4 வருகின்ற உள்ளாட்சித் தேர்தலில் வெற்றி பெறும் வகையில் அதற்கான களப் பணிகளை இன்றே தொடங்கி செயல் படுத்துவது என தீர்மானிக்கப் பட்டது.*

### தி.மு.க.தொண்டர் அணிச் செயலாளர் மாஸ்டர் பெ.சேகர் தலைமையில்

# தி.மு.க. தொண்டர் அணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா!

## ஏழை – எளியோருக்கு நல உதவிகளுடன் – அறுசுவை உணவு வழங்கும் விழா!

*சென்னை, ஜூலை 12 -*

*தி.மு.க. தொண்டர் அணி யின் சார்பில் காலத்தை வென்றவரும் அரசியல் ஞானியுமான முத்தமிழறி ஞர் கலைஞர் அவர்களின் 103ஆம் பிறந்த நாள் விழா வினையொட்டி, இன்று (12.07.2026 - ஞாயிற்றுக் கிழமை) மாலை 5.00 மணி யளவில், காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், மது ராந்கதம் ஒன்றியம், நீர்ப் பெயர் ஊராட்சியில் உள்ள "மேல்வசலை கிரா மத்தில்" மாநிலத் தொண் டர் அணி மாநிலச் செய லாளர் மாஸ்டர் பெ. சேகர் தலைமையில் - மாநிலத் தொண்டர் அணித் தலைவர் காஞ்சி ஜி.சுகுமாரன் முன்னிலை யில்;*

*காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகச் செயலா ளர் க.சுந்தர், மதுராந்தகம் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் பொன்.சிவக் குமார், ஒன்றியக்குழு உறுப்பினர் இராமகிருஷ் ணன் ஆகியோர் நலத் திட்ட உதவிகள் வழங்கி அறுசுவை உணவு வழங்குகின்றனர்.*

*தொண்டர் அணி மாநி லத் துணைச் செயலாளர் கள் ப.கோமான், ஆவின் எம்.ஆறுமுகம், சுப.சரவ ணன், பி.எம்.முனிவேல், எஸ்.எம்.அன்பழகன், எஸ். எம்.கே.அண்ணாதுரை, மாநிலப் பயிற்சியாளர் இ.குருதாஸ் மற்றும் மேல் வசலைக் கிளைக் கழகச் செயலாளர் மு.சண்முகம், கீழ்வசலைக் கிளைக் கழ கச் செயலாளர்கள் கஜ பதி, காத்தவராயன், நீல மங்கலம் கிளைக் கழகச் செயலாளர்கள் என். டி.ஜெயபால், சிவானந் தன், தாமரைச்செல்வன், நீர்ப் பெயர் கிளைக் கழ கச் செயலாளர் வாசுதே வன் ஆகியோர் இவ்விழா வில் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.*

*மேல்வசலை மு.கண் ணப்பன், கி.இராமசாமி, மா.ஆறுமுகம், முன்னாள் கவுன்சிலர், ஆதிகேசவன், இரவிச்சந்திரன், முன் னாள் கவுன்சிலர் ஆறுமு கம், கு.எத்திராஜ், மு.கும ரன், கு.தேவதாஸ் செ. சிவக்குமார், இரஞ்சித் குமார் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.*

### சென்னை மெட்ரோ ரயிலில் விதிகளை மீறி

# மற்றவர்களுக்கு இடையூறு செய்பவர்களுக்கு அபராதம்!

## மெட்ரோ நிர்வாகம் அறிவிப்பு!

சென்னை, ஜூலை.12-

சென்னை மெட்ரோ இரயிலில் விதிகளை மீறி மற்றவர்களுக்கு இடையூறு செய்பவர்களுக்கு அபரா தம் விதிக்கப்படும் என்று மெட்ரோ நிர்வாகம் அறி வித்துள்ளது. செல்போனில் உரத்த குரலில் உரையாடு தல்; ஹெட்போன் இன்றி இசை அல்லது வீடியோக் களைப் பார்ப்பது; அலை பேசியில் மெட்ரோ இர யில்களிலும் வளாகங்களி லும் ஒலிபெருக்கி வசதியைப் பயன்படுத்து தல் ஆகிய குற்றங்களுக்கு அபராதம் ரூ.500லிருந்து அதிகபட்சமாக ரூ.2,500 வரை உயர்த்தப் பட்டுள்ளது.

மெட்ரோ இரயில் பயண ஒழுங்குமுறைக ளைப் பின்பற்றி, சக பய ணிகளின் வசதிக்கும் அமை திக்கும் மதிப்பளிக்குமாறு அனைத்துப் பயணிகளை யும் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் கேட் டுக்கொள்கிறது. மெட்ரோ இரயில் இயக்கம் மற்றும் பராமரிப்பு சட்டம் 2002 பிரிவு 59ன் கீழ், சக பயணி களுக்குத் தொந்தரவு விளைவிப்பதோ அல்லது அவர்களின் வசதிக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் செயல்படுவதோ தண்டனைக்குரிய குற்ற மாகும்.

அலைபேசியில் உரத்த குரலில் உரையாடுதல்; செவியில் பொருத்தி கொள்ளும் ஒலிபெருக்கி (Headphones) இன்றி இசை அல்லதுவீடியோக்களைப் பார்ப்பது; அலைபேசியில் மெட்ரோ இரயில்களிலும் வளாகங்களிலும் ஒலிபெ ருக்கி வசதியைப் பயன்ப டுத்துதல் (Speaker mode); மேற்கண்ட செயல்கள் மூலம் அதிகப்படியான இரைச்சலை ஏற்படுத்தும் வகையில் அலைபேசி களைப் பயன்படுத்துவதும் மற்றவர்களுக்கு இடையூறு விளைவிப்பதும் தண்ட னைக்குரிய குற்றமாகக் கருதப்படும்.

மத்திய வீட்டுவசதி மற் றும் நகர்ப்புற விவகா ரங்கள் அமைச்சகம் (Mo HUA) 19.06.2026 அன்றுவெ ளியிட்ட அரசிதழ் (Gazette) அறிவிப்பின்படி, 'ஜன் விஸ் வாஸ் சட்டம் 2026'இன் கீழ் ஒரு புதிய திருத்தம் கொண்டுவரப்பட்டுள் ளது. இதன்படி, மெட்ரோ இரயில் மற்றும் அதன் வளாகங்களில் மற்ற பய ணிகளுக்கு இடையூறு விளைவிக்கும் செயல்களில் உதாரணமாக: செவியில் பொருத்தி கொள்ளும் ஒலி பெருக்கிஇல்லாமல் உரத்த சத்தத்தில் பாட்டு கேட்பது போன்றவைகளில் ஈடுபடு பவர்களுக்கான அபராதத் தொகை, பிரிவு 59இன் கீழ், முன்பிருந்த ரூ.500லிருந்து தற்போது அதிகபட்சமாக ரூ.2,500 வரைஉயர்த்தப் பட்டுள்ளது. மேலும், விதி களை மீறும் பயணிகள் அங்கீகரிக்கப்பட்ட அதிகா ரிகளால் மெட்ரோவளா கத்திலிருந்து உடனடியாக வெளியேற்றப்படவும் வாய்ப்புள்ளது.

எனவே, சக பயணிக ளின் பயணச் சூழலைக் கருத்தில் கொண்டு, அனை வரும் செவியில் பொருத்தி கொள்ளும் ஒலிபெருக் கியை (Headphones) பயன் படுத்துமாறும், மெட்ரோ இரயில் மற்றும் அதன் வளாகத்திற்குள் உரத்த குர லில் உரையாடுதல் மற்றும் ஸ்பீக்கர் மோட் பயன் பாட்டைத் தவிர்க்குமாறும் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் கேட்டுக் கொள்கிறது.

### சேலம் மாநகராட்சியில் - குடிநீர் விநியோகம்

# தனியாருக்கு வழங்கியது, மக்கள் விரோத நடவடிக்கை!

## மாமன்ற உறுப்பினர் கண்டன அறிக்கை!

சேலம். ஜூலை 12–

சேலம் மாநகராட்சியில் குடிநீர் விநியோகப் பணியை தனியாருக்கு வழங்கக் கூடாது என்று மாநகராட்சி மன்றத்தில் தீர்மானம் நிறை வேற்றப் பட்டி ருந்தும், அந்த தீர்மானத்தை முற் றிலும் புறக்கணித்து மீண்டும் தனியா ருக்கு தண்ணீர் விநியோக ஒப்பந்தத்தை வழங்கியிருப்பது மக் கள் விரோத நடவடிக்கையாகும்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநகராட்சி மன்றத்தின் தீர்மானத்திற்கே மதிப்பளிக்காமல் செயல்படுவது ஜனநாயகத்தின் அடிப் படை நெறிமுறைகளுக்கு எதிரானது. பொதுமக்களின் கருத்தையும், உள் ளாட்சி அமைப்பின் அதி காரத்தையும் அலட்சியப்படுத்தி தனியாருக்கு ஆத ரவாக செயல்படுவது கடுமையாகக் கண்டிக்கத்தக்கது.

குடிநீர் என்பது வணிகப் பொருள் அல்ல; அது மக்களின் அடிப்படை உரிமை. அந்த அத்தியாவசிய சேவையை தனியாரிடம் ஒப்படைப் பது மக்களின் நலனைக் காட்டிலும் தனியார் நிறுவனங்களின் நலனுக்கு முன்னுரிமை அளிப்பதாகவே பார்க் கப்படு கிறது.

எனவே, சேலம் மாநகராட்சி நிறை வேற்றிய தீர்மானத்திற்கு உரிய மரியா தை அளித்து, தனியாருக்கு வழங்கப் பட்டுள்ள இந்த ஒப்பந்தத்தை உடனடி யாக ரத்து செய்து, குடிநீர் விநியோ கத்தை முழுமையாக பொதுத்துறை மூலமே மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்.

இல்லையெனில், மக்களின் நல னைக் காக்க ஜனநாயக வழியில் நடைபெறும் அனைத்து போராட்டங்க ளுக்கும் முழு பொறுப்பும் அரசுக்கே உரியது என்பதை தெரிவித்துக்கொள் கிறேன்.



இந்திய நாட்டின் விடுதலைக்காக போராடி களத்தில் நின்று உயிர்நீத்த மாவீரர் அழகுமுத்துக்கோன் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, விளாத்திகுளம் பாரதியார் பேருந்து நிலையம் முன்பு அமைக்கப்பட்டுள்ள திருவுருவப்படத்திற்கு விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர், ஜீ.வி.மார்க்கண்டேயன் மலர் தூவி மரியாதை செலுத்தினார். நிகழ்வில் ஒன்றியச் செயலாளர்கள் ராமசுப்பு, அன்புராஜன், இம்மானுவேல், விளாத்திகுளம் பேரூர் கழகச் செயலாளர் வேலுச்சாமி, மாவட்டப் பிரதிநிதி ராமலிங்கம், வார்டு செயலாளர் மாரிராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.




முன்னாள் அமைச்சரும், திருவண்ணாமலை சட்டமன்றத் தொகுதி உறுப்பினருமான எ.வ.வேலு மீது முகநூலில் அவதூறு பரப்புவோர்மீது மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம், வழக்கறிஞர் இரா.கார்த்திகேயன் தலைமையில் புகார் மனு அளித்தனர். உடன் வழக்கறிஞர்கள் அ.அருள்குமரன், ந.முரளி, ஜெ.வெங்கடேசன், எஸ்.கார்த்திகேயன், இரா.பச்சையப்பன், கார்த்தி, அமிர்தராஜ், விக்னேஷ், சதிஷ்குமார், மோகன்ராஜ், பிரகாஷ், ஸ்ரீராம், விக்னேஷ், அன்பு, முனியன் ஆகியோர் உடன் உள்ளனர்.